"*Pandaravanniyan*"

(A CEYLON HISTORICAL PLAY)

*by*

*V. Subramaniam*

B. A. Spl. (Ceylon)

(3-5-1933)

**FIRST EDITION :** June 1970

**PUBLISHERS :** Pandaravanniyan-Kazhakam
Mulliyawalai
Ceylon

**PRINTERS** Sakthy Press
Mulliyawalai
Ceylon

பதிப்புரிமை ஆசிரியருக்கு

இந் நாடகத்தை மேடையேற்ற விரும்புவோர் ஆசிரியரிடம் எழுத்துமூலம் அனுமதி பெற வேண்டும். விமரிசனத்திற்காக வன்றி வேறெவ்விதத்திலும் நாடகத்தின் பெயரோ வசனங்களோ எடுத்தாளப் படக் கூடாது.

**PRICE :** **Rs. 2-50**

V. SUBRAMANIAM
NAVALAR ROAD
MULLIYAWALAI

# முகவுரை

வன்னிநாடு வளம் நிறைந்தது; குளம் மலிந்தது; தேன் பாடும் மீன்நாடாம் வன்னியில் செந்நெல்லும்கரு நெல்லும் தீம்பலாவும் தேமாவும் தேக்கும் கருங்காலியும் மலிந்து கிடக்கின்றன. வன்னிநாடு வீரஞ்செறிந்தது; அஞ்சாநெஞ்சம் படைத்த அருந்தமிழ் மன்னர் அரசோச்சிய நாடு. அன்னியராம் ஐரோப்பியர் அடுத்தடுத்து வந்து ஈழத்தின் பிற பகுதிகளைப் பிடித்தபோதும் மாற்றானுக்கு மண்டியிடாது - அன்னியனுக்கு அடிபணியாது - அரசு புரிந்தது வன்னிநாடு. வற்றாத வளமுள்ள வன்னிநாட்டின் வளத்தைக் கண்ட அன்னியர் அவற்றைக் கவர்ந்து செல்வஞ் சேர்க்கச் சிந்தை கொண்டனர்; பயம்காட்டினர்; திறைவேண்டுமென்று செப்பினர். அடிபணிய மறுத்த மன்னர் பலர். அவர்கள் வரிசையிலே சிறப்பிடம் பெறுபவன் பண்டாரவன்னியன். ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கெதிராகப் போர்க்கொடி உயர்த்தி இறுதி மூச்சுவரை போராடிய மாவீரன் வரலாறு பற்றைக் காடுகளிலும் பழம் ஏடுகளிலும் மறைந்திருந்தது. வரலாற்று ஆசிரியர்கள் மறந்தனர். வன்னிமக்கள் மறந்தனர்; கன்னித்தமிழின் காவலர் மறந்தனர். மறக்கப்பட்டு மறைக்கப்பட்டிருந்த காலத்திலே தோன்றிய விழிப்புணர்ச்சியின் பிரதிவிம்பந்தான் **'முல்லைமணியின் பண்டாரவன்னியன்'** வரலாற்று நாடகம்.

முல்லைமணி வே. சுப்பிரமணியம் அவர்கள் சிறந்த ஆராய்ச்சியாளர்; தெவிட்டாத தீந்தமிழ் நாடகம் பல

புனைந்தவர். கவிபுனையும் ஆற்றலும் கட்டுரை வன்மையும் மிக்கவர். இவரின் விடாமுயற்சியால்-வரலாற்று ஆராய்ச்சியால்-பண்டாரவன்னியன் வரலாறு தமிழ் கூறு நல்லுலகத்தால் அறியப்படுகின்றது. காட்டிலும் பழம் ஏட்டிலும் மண்மேடுகளிலும் தேடித் தொகுத்தவற்றை ஆதாரமாகக் கொண்டு ஆக்கப்பட்டது பண்டாரவன்னியன் நாடகம். இவரின் நாடகம் வன்னிமாதாவுக்குச் சூடப்படும் மணி ஆரம்; கன்னித்தமிழன்னையின் பாதங்களை அலங்கரிக்கும் வாடாமலர். வன்னித் தமிழ் மன்னரின் வரலாற்றினை உலகறியச் செய்ய வேண்டும் என்ற தாகம் இவரின் ஆக்கத்தின் அடிநாதமாக அமைந்துள்ளதைக் காணலாம். பல தமிழ், ஆங்கில நூல்களை நாடக ஆசிரியர் பயன்படுத்தியுள்ளார். நடிப்பதற்குரிய நாடகப்பகுதியோடு படிப்பதற்கும் சிந்திப்பதற்கும் உகந்த வகையில் வரலாற்றுக் குறிப்பை இணைத்துள்ளார். இக்குறிப்பு சரித்திர ஆராய்ச்சி செய்யும் மாணவர்க்குப் பெருந்துணைபுரியும்.

கதையமைப்புத் தெளிவானது. ஆவலைத் தூண்டக் கூடிய முறையில் காட்சிகள் அமைந்துள்ளன. வீரச் சுவை சொட்டும் பாடல்களும் விறுவிறுப்பான வசனங்களும் நாடகத்தை அழகுபடுத்துகின்றன. வெள்ளையரின் சம்பாஷணையில் இன்னும் கூடுதலாக ஆங்கிலப் பதங்களைச் சேர்த்திருக்கலாம். பாத்திரப் படைப்பும் பாராட்டக் கூடிய முறையில் அமைந்துள்ளது. மாசு மறுவற்ற இலட்சியப் பாத்திரமாகவே பண்டாரவன்னியனைப் படைத்துள்ளார். வன்னிநாட்டுக்குப் பெருமை தேடித் தந்த பண்டாரவன்னியனை மட்டுமன்றி இழிவு தேடித் தந்த காக்கைவன்னியனையும் ஆசிரியர் சித்தரிக்கத் தவறவில்லை. இது ஆசிரியரின் 'சமன் செய்து சீர்தூக்கும் கோல்' போன்ற தன்மையைக் காட்டுகின்றது.

ஆசிரியரின் வரலாற்று ஆராய்ச்சியின் ஒரு கட்டந்தான் இந் நாடகம். தொடர்ந்து ஆராய்ந்துவரும் இந் நூலாசிரியர் பண்டாரவன்னியன் கழக ஸ்தாபகர்களுள்



முக்கியமானவர். இதன் தலைவராகத் திகழும் இவர் இரு முறை பண்டாரவன்னியன் விழாவினைப் பிரமாண்டமான முறையில் கொண்டாடப் பெருமுயற்சி எடுத்தவர். இவ் விழாக்களில் அடியேனும் பங்குகொண்டு தொண்டுசெய்ய வாய்ப்புத் தந்தவர். முல்லைமணி அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து, பல நாடக நூல்களையும், ஆராய்ச்சி நூல்களையும் வெளியிட வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

**தா. சிவசிதம்பரம்**
பாராளுமன்ற உறுப்பினர்
வவுனியா.

**வவுனியா.**
**1-3-70.**

வருக்கு இருக்கவேண்டிய மொழியறிவு, கலை ஞானம், மேடை அனுபவம் என்பவற்றை நிறையப் பெற்றுள்ளார் என்பது தெரிகிறது. இந் நாடகத்தில் அவர் உபயோகிக்கும் விறுவிறுப்பான வசனங்கள் கருத்துச் செறிவுடையன வாக இருப்பது மட்டுமன்றி, கேட்போரது உள்ளங்களைத் துரிதமாகச் சிந்திக்கத் தூண்டுவனவாகவும் உள்ளன. நாடகத்தின் நோக்கத்தை நன்ருக உணர்ந்து நமது பண்பாட்டைப் பேணிப் பாதுகாக்கக் கூடியவாறு எழுதப்பட்டுள்ளது இந் நாடகம்.

இந் நாடகத்தைத் தற்காலத்துக்கு மிகவும் உபயோகப்படக்கூடிய நாடகம் என்றே கூறலாம். இதுபோன்ற நாடகங்களை இந் நூலாசிரியரும் மற்றுமுள்ளோரும் இயற்றி நடித்து வருவாராயின் நமது கலையும் பண்பாடும் உயர்வடையும் என்பதற்கு ஐயமில்லை.

நவாலி,
மானிப்பாய்.
29-2-70.

**சு. சொர்ணலிங்கம்**

# அணிந்துரை

முல்லைமணியின் 'பண்டாரவன்னியன்' நாடக நூலுக்கு அணிந்துரை அளிப்பதில் அளவில்லா மகிழ்ச்சி அடைகிறேன். வன்னிநாட்டின் மானங்காக்க இறுதிமூச்சு வரை அன்னியருடன் போராடிய மாவீரனின் வரலாறு இதுவரை மறைந்திருந்தது. இம் மாவீரனின் வரலாற்றை பல ஆண்டு ஆராய்ச்சியின் பயனுக நாடறியச் செய்த பெருமை முல்லைமணி அவர்களையே சாரும். வன்னிநாட்டில் ஆங்காங்கு பரவிக் கிடக்கும் அழிபாடுகளையும், கல்வெட்டுக்களையும் பார்வையிட்டும், பழைய நூல்களையும், ஏட்டுப் பிரதிகளையும், கர்ண பரம்பரைக் கதைகளையும் ஆராய்ந்தும்பெற்ற தகவல்களைக் கொண்டு பண்டார வன்னியன் வரலாற்றை ஆசிரியர் உருவாக்கியுள்ளார். மறைந்திருக்கும் சம்பவங்களைத் தேடித் தொகுத்து அவற்றை ஆதாரமாகக் கொண்டு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாடகமொன்றை உருவாக்குவது சாதாரண விஷயமல்ல. சரித்திர ஆராய்ச்சியிலும், நாடகக் கலையிலும் ஆசிரியருக்குள்ள தணியாத ஆர்வம் 'பண்டார வன்னியன்' நாடகம் மூலம் தெளிவாகத் தெரிகிறது.

வரலாற்று மூலாதாரங்களைத் தேடித் தொகுப்பதிற் பட்ட கஷ்டங்கள் அளப்பில. எமது கிராமத்துக்குப் பதினுலு கல் தொலைவிலுள்ள கற்சிலை மடுக் காட்டினுள் கடுந்தவம் செய்துகொண்டிருக்கும் பண்டாரவன்னியன் சிலைக் கல்லைப் பார்வையிட யானும் நாடக ஆசிரியருடன் சென்றிருந்தேன். துவிச்சக்கரவண்டியில் சென்றபோது

தைப் பலமுறை மேடையில் பார்த்தவர். அன்னார் எம் நூலுக்குச் சிறந்ததோர் அணிந்துரை எழுதியுதவிய மைக்கு என் மனப்பூர்வமான நன்றி.

எனது வேண்டுகோளுக்கிணங்க வவுனியா நாடாளு மன்ற உறுப்பினரும், பண்டாரவன்னியன் கழகப் போஷ கருமாகிய திரு. தா. சிவசிதம்பரம் அவர்கள் முகவுரை தந்து எம் நூலைச் சிறப்பித்துள்ளார். இருமுறை நடை பெற்ற பண்டாரவன்னியன் விழாக்களில் பங்குகொண்டு விழாக்களைச் சிறப்பித்தும், வரலாற்று ஆராய்ச்சிக்குத் தூண்டுகோலாயிருந்தும் பெரும்பணி புரிந்த பாராளுமன்ற உறுப்பினரை நாம் மறக்க முடியாது.

உடனிருந்து ஊக்கந் தந்த நண்பர் நாடகத் துறைக்கு என்னை இழந்துச் சென்ற உண்மைக் கலைஞர் முள்ளிய வளை இயல் இசை நாடகக் கலர்மன்றத்தின் பொதுச் செயலாளர் சிவநேசன் வே. கந்தையா அவர்களின் பேனா முனை இந் நூலுக்கு அணிந்துரை எழுதியது. அவருக்கும் நன்றி.

நாடகத்தின் இயக்குனர் பணியைப் பலமுறையேற்றுச் சிறப்புடன் மேடையேற்றியவர்கள் நடிகர் திலகங்களான சு. கணபதிப்பிள்ளையும், அ. செல்லத்துரையும். அவர் களின் பணி அளப்பரிது.

வன்னி இளைஞர் சமுதாயத்தின் இலக்கிய ஆர்வத் தின் உருவம், முள்ளியவளை பாரதி இலக்கிய மன்றத்தின தலைவர் கவிஞர் 'திலீபன்' அவர்களின் வாழ்த்து கவிதை நூலை அலங்கரிக்கின்றது. கவிஞருக்கு மனப்பூர்வமான நன்றி.

இருபதுக்கு மேற்பட்ட தடவைகளில் வவுனியா மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் யாழ்ப்பாணத் திலும் கொழும்பிலும் மேடையேற்றப்பட்ட இந் நாட



கத்தில் நூற்றுக்கு மேற்பட்ட நடிகர்கள் இதுவரை நடித் துள்ளனர். அத்தனைபேருக்கும் நன்றி.

அன்புள்ளம் படைத்த வள்ளல்கள் பலரின் நிதியுதவி கொண்டு பண்டாரவன்னியன் கழகம் இந்நூலை வெளியிடு கின்றது. வள்ளல்களுக்கும், கழகத்தினர்க்கும் அன்பு கலந்த நன்றி.

அட்டைப் படத்தின் அமைப்பிற்கு வேண்டிய ஆலோ சனை கூறிய பண்டாரவன்னியன் கழகச் செயலாளர் ஓவி யர் இ. வரதராசா அவர்களுக்கு நன்றி கூறுது விடின் யான் எனது கடமையில் தவறியவனுவேன்.

அச்சக அதிபருக்கு வேண்டிய பொறுமை, சாந்த குணம், என்றும் மலர்ந்த இன்முகம் அத்தனையும் பொருந் தியவர் சக்தி அச்சக அதிபர் பொன். இராசரத்தினம் அவர்கள். 'இம்'மென்னுமுன்னே இருபது பக்கங்களைச் சிறப்புடன் அச்சேற்றும் திறமை அவரின் தனியுரிமை. அவருக்கு நாம் கொடுத்த பணத்தைவிடத் தொல்லைகளே அதிகம். இந் நூலைச் சிறப்புடன் குறைந்த செலவில் அச் சேற்றியுள்ளார். அவருக்கும், அட்டைப் படத்தை ஆக்கி நூலை அழகுறச் செய்த சுன்னுகம் திருமகள் அழுத்தகத் தாருக்கும் உள்ளங்கனிந்த நன்றி.

வணக்கம்.

நாவலர் வீதி,
முள்ளியவளை.
3-5-70.

"முல்லைமணி"

கொழும்பு தமிழ்ச் சங்கம்

நூலகம்

துதி என்பாளைத் திருமணஞ் செய்ய விரும்பினான். மணம் பேசி வருமாறு தூதுவரை இந்தியாவுக்கு அனுப்பினான். மதுரை மன்னன் தனது ஆலோசகர் குழுவிலிருந்த அறுபது வன்னியரை அழைத்து அவர்களுடன் தனது மகளை இலங்கைக்கு அனுப்பினான். அவர்கள் சாமுத்துதியை வலசிங்க மன்னனுக்குத் திருமணம் செய்துவைத்தனர். மகிழ்ச்சியடைந்த வலசிங்க மன்னன் வன்னியர் விரும்பிய பரிசைக் கேட்குமாறு கூறினான். அவர்கள் அடங்காப்பற்று என்னும் பிரதேசத்தைத் தமக்கு அளிக்குமாறு வேண்டினர். "நீங்கள் அடங்காப்பற்றுக்குச் செல்லுங்கள்; அங்குள்ள தீயோரை அழித்து நல்லோரைப் பாதுகாருங்கள்; குடியேற்றங்களை ஏற்படுத்துங்கள்; குளங்களைக் கட்டுங்கள்'' என மன்னன் கூறினான்.

வன்னியரின் குடியேற்றம்பற்றிய இவ்விரு கதைகளையும் நாம் வெறுங் கட்டுக்கதையென்று ஒதுக்கிவிட்டாலும் கூட, வன்னியர் இந்தியாவிலிருந்து கி. பி. 4-ம், 5-ம் நூற்றாண்டளவில் இலங்கைக்கு வந்துவிட்டனர் என்ற உண்மையை ஏற்றுக்கொள்ளலாம்.

ஒல்லாந்தர் இலங்கையின் பிற பகுதிகளை ஆட்சி செலுத்தும்போது வன்னியை ஆண்ட மன்னர்களின் விபரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| டொன்பிலிப்பு நல்லமாப்பாணன் | — | பனங்காமம் |
| டொன் கஸ்பார் கவுசையினார் | — | பறையனாலங்குளம் |
| இலங்கை நாராயணன் | — | புதுக்குடியிருப்பு |
| பெரிய மெயினார் | — | முள்ளியவளை |
| அம்பலவன்னியன் | — | கருநாவற்பற்று |
| சேதுகாவலவன்னியன் | — | தென்னன்மரபடி |
| டொன்கஸ்பார் நிச் செந்திராயன் | — | பூநகரி |
| நல்ல நாச்சியார் | — | பனங்காமம் |
| கைலாய வன்னியன் | — | பனங்காமம் |



வன்னியரின் அடங்காத் தன்மைபற்றி ஒல்லாந்த கொம்மாந்தர்மாரின் அறிக்கைப் பத்திரங்களில் பல குறிப்புக்கள் காணப்படுகின்றன. ஹென்றி சுவாடக் குரூன் (1694-97) என்னும் ஒல்லாந்த கொம்மாந்தர் எழுதியிருப்பதாவது:

''இவ் வன்னியர்கள் கம்பனியின் பிரஜைகளாயிருந்தும் சாதியில் வேளாளரேயாயினும், காலகதியிலே மிகவுஞ் செருக்குற்றோராய் வன்னியன் என்னுந் தங்கள் பட்டம் ஏதோ பயங்கரமும், முக்கியமுமான பட்டமென எண்ணிக்கொண்டிருக்கின்றனர். ...... கம்பனியையாவது அதன் மேலுத்தியோகத்தரையாவது கௌரவிக்கவேண்டுமென்று சிறிதுங் கருதுகிறார்களில்லை.''

ஒல்லாந்தரும் ஆங்கிலேயரும் யாழ்ப்பாண இராச்சியத்தைப் பிடித்தவுடனே தாங்களே வன்னிநாட்டிற்கும் ஆட்சியாளர் என எண்ணினர். அதனால் வன்னி மன்னரைத் திறை செலுத்துமாறும், ஆண்டுதோறும் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் தேசாதிபதியின் தர்பாருக்குச் சமுகமளிக்குமாறும் கேட்டுக் கொண்டனர். எனினும், வன்னி மன்னர் அன்னியரின் மேலாணையை முற்றாக ஏற்றுக்கொள்ளவில்லை. திறை கொடுப்பதாக ஒப்புக்கொண்ட வன்னியர்கள் திறை கொடுக்காமலும், தர்பாருக்குப் போகாமலும் விட்டபோதும் ஒல்லாந்தர் அவர்களைப் பகைக்கவிரும்பவில்லை. பனங்காமத்தையாண்ட கைலாய வன்னியன் ஒல்லாந்த தேசாதிபதியின் தர்பாருக்குத் தொடர்ச்சியாகப் பன்னிரண்டு ஆண்டுகள் போகாதுவிட்டான். வன்னி மன்னரைப் பகைக்கின் அவர்கள் கண்டி மன்னனுடன் சேர்ந்துகொண்டு தம்மை எதிர்ப்பர் என ஒல்லாந்தர் அஞ்சினர். அரிப்புக் கோட்டையைப் பிடித்துவிடக்கூடும் என ஆங்கிலேயர் பயந்தனர். வன்னியர் யாழ்ப்பாணம் மீது படையெடுப்பதைத் தடுப்பதற்காக ஆனையிறவில் கோட்டைகளைக் கட்டிப் பாதுகாப்புச் செய்தனர்.

கொழும்

வீரஞ் செறிந்த மன்னர் பரம்பரையிலே வன்னிநாட்டின் கடைசி மன்னனாகவும், ஈழத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்பின் சின்னமாகவும் திகழ்ந்தவன் குலசேகரம் வயிரமுத்து பண்டாரவன்னியன். இவன் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தின் பிற்பகுதியிலும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தின் முற்பகுதியிலும் வன்னிநாட்டை ஆண்டான். இவனுடைய இராசதானி பண்டாரிக்குளம் என்னுமிடத்தில் அமைந்திருந்தது. வன்னி இராச்சியம் யாழ்ப்பாண இராச்சியத்திற்குக் கீழ் உள்ளது என்று தவறாக எண்ணிய அன்னியரின் கருத்தை அர்த்தமற்றதாக்கி, ஒல்லாந்தருக்கும்— ஆங்கிலேயருக்கும் பெருந் தொல்லை விளைவித்தவன் பண்டாரவன்னியன்.

ஈழத்தின் ஏனைய பாகங்களிலே தாய் மண்ணின் சுதந்திரத்திற்காக அயராது போரிட்ட மன்னர்கள் வரிசையிலே வைத்து எண்ணப்படக்கூடிய மாவீரன் பண்டார வன்னியனை ஈழத்து வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடத் தவறிவிட்டனர். வீரமும் செல்வமும் ஒருங்கேயமைந்த வன்னி இராச்சியம்பற்றிய குறிப்புக்களை ஈழத்து வரலாற்று ஏடுகள் கண்டறியமாட்டா. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தபோது கோட்டை இராச்சியம், கண்டி இராச்சியம், யாழ்ப்பாண இராச்சியம் என்னும் மூன்று இராச்சியங்கள் இருந்தன என்றே இன்றைய மாணவர் படிக்கும் வரலாற்று நூல்கள் கூறும். வன்னி இராச்சியம் இருந்ததைப்பற்றி அறிய வாய்ப்பில்லை.

**''அன்னை பூமியென் றும்அடங் காப்பற்றும்**
**வன்னி மண்ணினின் மானத்தைக் காத்திடத்**
**தன்னு யிர்கொடுத் துப்புகழ் கொண்டமா**
**மன்னன் மாவீரன் பண்டார வன்னியன்''**

அன்னை பூமிக்காகத் தன்னுயிர் கொடுத்த மாவீரன் வரலாற்றை மக்கள் மனத்திலே பதியவைக்கும் நோக்குடனேயே இந் நாடகம் எழுதப்பட்டது. மாவீரனின் பெயரால் அமைந்த நாடகத்தை எழுதுவதற்கு ஆதாரமாகவுள்ள வரலாற்றுக் குறிப்புக்களைக் கீழே தருகிறேன்:



**J. P. LEWIS — MANUAL OF VANNI**

1. Before it acquired the name (Vanni) it appears to have been known as the Adankappattu, because it was independent of both Jaffna and Anuradhapura.

2. It is characteristic of the spirit of this people that the Dutch met nowhere a more determined resistance than from one of the native princess, the Vannichi Maria Sempatte (Nallanachchiyar).

3. Pandara Vanniyan ...... again revolted and undertook to expel the English from his country. ......... on August 25, 1803 attacked the Government house at Mullaitivu in great force drove out the garrison which was under the command of Captain Drieberg of the ''Invalid Malays'' and seized the fort. Captain Drieberg withdrew his small garrison in good order to boats, which had been sent to Mullaitivu to secure his retreat, and by this means to Jaffna. The insurgents were subsequently driven from Mullaitivu and its neighbourhood by a detachment sent from Trincomalee under captain Edward Medge of the 19th Regiment. Kumarasegara Mudaliyar and Several others who were strongly suspected of treason were captured and executed. Another detachment was sent from Jaffna Under Lieut. John Jewell of the 19th Regiment. A third under Captain Drieberg marched from Mannar and surprised Pandara's forces at Katchilamadu at 5 a. m. on Oct. 31, 1803.

4. Pandara Vanniyan had carried off three cannons from Mullaitivu in 1803-

**MOOTHUTHAMBYPILLAI** — YALPANA SARITHAM (as quoted by C. S. Navaratnam)

5. Pandara Vanniyan of Mullaitivu was a Courageous and independent prince. On one occasion the dutch authorities forced him to supply them with dye roots which request he flatly refused to carry out.

**C. S. NAVARATNAM** — VANNI AND THE VANNIYAS

6. A sister of this defiant prince (Pandara Vanniyan) was married to Kumarasinghe Vanniya, the eldest son of Nuwara Vanniyan.

7. Poodan Arachchee was instrumental in entrapping this Vannichchy (Nallanachchan). He employed all the arts of persuasion to remove her in a palanquin. There are many traditions in Jaffna Connected with this arrest.

**STONE INSCRIPTION AT KATCHILAIMADU**

8. HEREABOUTS CAPTAIN VON DRIEBERG
DEFEATED PANDARA VAWNIYA*
31st OCT. 1803.

**முதலியார் குலசபாநாதன்** — வளமிகு வன்னிநாடு (கட்டுரை)

9. இலங்கையில் வீரஞ் செறிந்த சிற்றரசர்களாக விளங்கியவர்கள் வன்னியர்கள். இவர்களுடைய வீரத்தைக்

* கல்வெட்டில் *Vanniyan* என்னும் சொல் *Vawniya* என்றே பொறிக்கப்பட்டுள்ளது.



கண்டு போர்த்துக்கீசரும் ஒல்லாந்தரும் அஞ்சினர். பிரிட்டிசாருக்கு அதிக தொல்லைகொடுத்தவர்கள் வன்னியர்கள்.

10. கி. பி. 1803இல் ஆங்கிலேயருக்கும் கண்டியரசனுக்கும் போர் நிகழ்ந்தபோது ஆங்கிலேயரை இலங்கையிலிருந்து தொலைத்துப்போடுவதாகச் சபதங் கூறிக் கொட்டியாரத்தையும், முல்லைத்தீவையும் பிடித்தான்.

**எச். டபிள்யூ. கொடிறின்றன்** — இலங்கையின் சுருக்க வரலாறு

11. அமியன்சு உடன்படிக்கையின்படி இலங்கை யாட்சி பிரிட்டிசாருக்கென ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**Grant and Temperley** — Europe in the nineteenth and the twentieth Century

12. ......the peace of Amiens was signed (March 27, 1802) ...... all English Conquests from France were to be restored, but **Ceylon** and Trinidad, which had been ceded, the one by **Holland** and the other by spain were to be retained by the British.

பெரியமெயினர் : அண்ணு, எமது சிநேகிதத்தை வேண்டி ஓலையனுப்பியிருக்கும்போது அதை நிராகரிப்பது அழகல்ல. தர்பாருக்குப் போவதால் எதுவுங் கெட்டுவிடாது.

பண். வன். : தூதுவரே! நீர் போகலாம். முடிவு பின்னர் அறிவிக்கப்படும்.

(தூதுவன் போகிருன்)

கை. வன். : இந்த அழைப்பில் எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. தங்களைப் பிடிக்கச் சூழ்ச்சியாகவுமிருக்கலாம்.

பண். வன். : சூழ்ச்சி ? ஒல்லாந்தரின் திடீர் மனமாற்றத்தில் ஏதோ மர்மம் இருக்கத்தான்வேண்டும்.

கை. வன். : ஒல்லாந்தர் விரிக்கும் வலையில் நாம் ஏன் போய் விழவேண்டும்?

பண். வன். : அப்படியென்ருல் அழைப்பை நிராகரிக்க வேண்டுமென்று சொல்கிருயா?

கை. வன். : அவர்களுக்கு ஏதும் தேவையென்ருல் தங்களிடம் வந்து கேட்பதுதானே.

பெரியமெயினர் : அண்ணு, அரிப்புக் கோட்டையை நாம் பிடித்துவிடுவோம் என்று அவர்கள் அஞ்சுகின்ருர்கள். தவிர, கோட்டை இராச்சியத்திற்குப் போக்குவரத்துச் செய்வதற்கு இடையூறு ஏற்படா வண்ணம் எமது சிநேகத்தை வேண்டியுமிருக்கலாமல்லவா?

பண். வன். : அப்படியும் இருக்கலாம்.

கை. வன். : போவதாயிருந்தால் போதிய முன்னேற்பாட்டுடன் போகவேண்டும்.



பெரியமெயினர் : அண்ணு, தங்களுடன் நானும் ஐநூறு நம்பிமாரும் வருகிருேம்.

பண். வன். : சரி, கொலுவிற்கு வருவதாக ஓலை யனுப்பிவை. வன்னிநாட்டு மக்களின் நன்மைகருதிச் சமாதானமாக வாழவேண்டும்.

பெரியமெயினர் : ஆகட்டும் அண்ணு.

திரை

**

# இந் நூலாசிரியர்

வவுனியாப் பகுதியில் முல்லைமணியைத் தெரியாதவர்கள் இருக்க முடியாது. கவர்ச்சிகரமான இந்தப் புனைபெயருக்குள் மறைந்திருக்கும் முள்ளியவளையைச் சேர்ந்த திரு. வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் அவர்கள் அவ்வளவு தூரம் பல துறைகளிலும் பிரசித்தி பெற்றவர்.



முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றும் முல்லைமணி இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சிறப்புக்கலைப் பட்டதாரி. அத்துடன் மகரகமை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் விஞ்ஞானச் சிறப்புப் பயிற்சியும் பெற்றவர்.

இலங்கைக் கலைக்கழக நாடக எழுத்துப் போட்டியிலும், பல கவிதைப் போட்டிகளிலும் பரிசு பெற்ற இவர், வன்னிநாட்டின் வரலாறு புதிய ஆராய்ச்சியின் அடிப்படையில் புதிய கண்ணோட்டத்துடன் எழுதப்பட வேண்டும் என்ற இலட்சிய வெறி கொண்டவர். இவரது ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல பத்திரிகைகளில் இடம் பெற்றுள்ளன.

நாடகத்துறையில் இவரது சாதனைகள் பற்பல. நடிகராக, இயக்குநராக, வசனகர்த்தாவாக இவர் பல துறைகளிலும் தனது கைவண்ணத்தைக் காட்டியுள்ளார். இருபதுக்கு மேற்பட்ட நாடகங்களைப் பாடசாலைகளுக்கும் நாடகமன்றங்களுக்கும் எழுதி உதவியுள்ளார். அச்சேறும் முதல் நாடகம் கலைக்கழகப் பரிசில்பெற்ற பண்டாரவன்னியனும். வவுனியாப் பகுதியில் நாடகக் கலை வளர்ச்சியில் பெரும்பங்கு கொள்பவர் முல்லைமணி.

முள்ளியவளை இயல், இசை, நாடகக் கலாமன்றத்தின் தலைவராகக் கடந்த 18 ஆண்டுகளாக இருந்து வருகிறார். பண்டாரவன்னியனின் கழக ஸ்தாபகர்களில் ஒருவரான இவர் அதன் தலைவராகவும் விளங்குகின்றார்.

நகைச்சுவை ததும்பப் பேசும் முல்லைமணி பழகுவதற்கு இனியவர். கலை ஆர்வமும் இலக்கிய ரசனையும் நிரம்பப் பெற்ற 37 வயதான இந்த உயர்கலைச் செல்வருக்கு மூன்று மழலைச் செல்வங்கள் உளர்.

வன்னி மண்ணின் சுதந்திர வேட்கையின் உருவமான பண்டாரவன்னியனை நாடறியச் செய்யவேண்டும் என்ற பெருநோக்குடன் உழைக்கும் முல்லைமணி வன்னிப்பகுதியின் இலக்கிய வளர்ச்சியின் சின்னமாக விளங்குகின்றார்.

— அப்பச்சி மகாலிங்கம்

அட்டை, சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தில் அச்சிடப்பெற்றது.